Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: தமிழ் மொழி

வாரம் - 5

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியர் R.யசந்தன்
கே/ உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

## பகுதி - 1

1. ‘பாரி மன்னன் சிறந்த கொடை வள்ளல்’ இங்கு வள்ளல் என்பதன் எதிர்கருத்துச் சொல்.
   I. ஊதாரி  II. கபோதி  III. உலோபி  IV. யாசகன்

2. ‘தந்தை இருந்தார் குன்றும் இருந்தது’ இங்கு குன்று என்பதன் எதிர்கருத்துச் சொல்.
   I. பருவதம்  II. குழி  III. மலை  IV. மேடு

3. ‘மலைக்குறத்திகள் நமக்குத் ……..’ இங்கு குறத்தி என்பதன் எதிர்ப்பாற் சொல்.
   I. குறத்தன்  II. குறத்தியன்  III. குறவன்  IV. குறியன்

4. ‘எயினர்கள் தந்தையின் பிரிவில்……’ இங்கு எயினர் என்பதன் எதிர்ப்பாற் சொல்.
   I. எயிற்றி  II. எயிற்றுச்சி  III. எயிணி  IV. எயினை

5. ‘இங்கு உமணர்கள் ஓட்டுகிற…..’ இங்கு உமணர் என்பதன் எதிர்ப்பாற் சொல்.
   I. உமணி  II. உமச்சி  III. உமட்டியர்  IV. உமணணி

6. ‘மலைமடியில் கண்வளர்ந்தோம்…..’ இங்கு கண்வளர்ந்தோம் எனும் தொடரின் பொருள்.
   I. இறந்தோம்  II. அழுதோம்  III. படித்தோம்  IV. தூங்கினோம்

## பகுதி - 2

1. ‘மண்ணின் மக்கள் புலம்பெயரும் வரலாறு’
   I. ‘புலம்பெயர்தல்’ என்பதன் பொருள் யாது?
   II. ‘வரலாறு’ என்பதன் பொருள் யாது?

2. ‘பழக ஒரு மரப்பாச்சி பாவையரே யார் பறிச்சா?’
   I. ‘மரப்பாச்சி’ என்பதன் பொருள் யாது?

3. ‘மலையைப் பிரிவது மலையைவிடக் கூடுதலாகக் கனக்கிறதே’
   I. ‘இங்கு எவ்வுணர்வு எடுத்துரைக்கப்பட்டுள்ளது?
   II. ‘கனம்’ என்பதன் பொருள் யாது?

4. ‘உமணர்கள் ஒட்டுகிற உப்பு வண்டியை எண்ணுறாங்க’
   I. ‘உமணர்கள்’ எனக்குறிப்பிடப்படுபவர் யாவர்?
   II. ‘உமணர்’ என்பதன் பெண்பால் வடிவத்தை எழுதுக.

5. ‘காற்றெல்லாம் தேனிழைக்க மலைமடியில் கண்வளர்த்தோம்’
   I. ‘கண்வளர்த்தோம்’ என்பதன் பொருள் என்ன?
   II. மலைமடியில் என்பதன் மூலம் பொருள் கொள்ளப்படுவது யாது?